செ. கு. எண்: 176 நாள் : 08.07.2013

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 8.7.2013

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை வட்டம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், அரும்பாவூர் பிரிவில் மஸ்தூராக பணி புரிந்து வந்த திரு. பரமசிவம் அவர்கள் 27.6.2013 அன்று அரும்பாவூர், வள்ளலார் தெருவில் மின்தடையை சரி செய்ய மின்கம்பத்தில் ஏறி மின்பாதை மாற்றும் பணியை மேற்கொண்டிருந்த போது, எதிர்பாராத விதமாக கீழே விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாடு மின்சார வாரிய மஸ்தூர் பணியாளர் திரு. பரமசிவம் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்பாதை மாற்றும் பணியை மேற்கொண்டிருந்த போது கீழே விழுந்து காலமான தமிழ்நாடு மின்சார வாரிய மஸ்தூர் பணியாளர் பரமசிவம் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**